# 04 ஜூலை 2023 – தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### உலக விளையாட்டுப் பத்திரிகையாளர்கள் தினம் 2023 – ஜூலை 2




- உலகம் முழுவதும் உள்ள விளையாட்டுப் பத்திரிகையாளர்களின் கடின உழைப்பை அங்கீகரித்து கௌரவிக்கும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 2ஆம் தேதி உலக விளையாட்டுப் பத்திரிகையாளர் தினம் அனுசரிக்கப்படுகிறது.
- இந்த நாள் 1924 இல் பிரான்சின் பாரிஸில் சர்வதேச விளையாட்டு பத்திரிகை சங்கம் (AIPS) நிறுவப்பட்டதை நினைவுகூருகிறது.
- ஜூலை 2, 2023 அன்று சர்வதேச விளையாட்டு பத்திரிகையாளர் சங்கத்தின் (AIPS) 99வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

**பின்னணி**

- உலக விளையாட்டு பத்திரிகையாளர் தினம் 1994ல் சர்வதேச விளையாட்டு பத்திரிகை சங்கத்தால் நிறுவப்பட்டது, அதன் அடித்தளத்தின் 70 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் மற்றும் விளையாட்டு ஊடக உறுப்பினர்களின் சாதனைகளைக் கொண்டாட அனுசரிக்கப்படுகிறது
- முதன்முதலில் உலக விளையாட்டுப் பத்திரிகையாளர்கள் தினம் ஜூலை 2, 1994 அன்று அனுசரிக்கப்பட்டது.

### சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லாத தினம் 2023 – ஜூலை 3



- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் அபாயகரமான விளைவுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூலை 3ஆம் தேதி உலகம் முழுவதும் "சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லாத தினம்" அனுசரிக்கப்படுகிறது.

SHANMUGAM IAS

- உலகளவில் தனிநபர்கள் மற்றும் சமூகங்கள் பிளாஸ்டிக் பைகளை நம்புவதைக் குறைத்து, மாற்றாக நிலையான தீர்வுகளைத் தேடுவதற்கு இந்த நாள் நினைவூட்டுகிறது.

**பின்னணி**

- பூஜ்ஜிய கழிவு ஐரோப்பாவின் (ZWE) உறுப்பினரான ரெஸெரோவால் தொடங்கப்பட்ட முதல் சர்வதேச பிளாஸ்டிக் பை இல்லாத தினம் 3 ஜூலை 2023 அன்று அனுசரிக்கப்பட்டது.
- முதல் பதிப்பு கேட்டலோனியா, பார்சிலோனா, ஸ்பெயின் ஆகிய இடங்களில் நடந்தது, பின்னர் 2009ல் பூஜ்ஜிய கழிவு ஐரோப்பா (ZWE) அதை ஐரோப்பிய அளவில் தொடங்க முடிவு செய்தது.
- ஐரோப்பிய ஒன்றியம் (EU), 2015 இல், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகளை சார்ந்திருப்பதைக் குறைக்க குறிப்பிட்ட உத்தரவுகளை இயற்றியது.

**ஜீரோ வேஸ்ட் ஐரோப்பா**

- நிர்வாக இயக்குனர் – ஜோன் மார்க் சைமன்
- தலைமையகம் – பிரஸ்ஸல்ஸ், பெல்ஜியம்

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### காலமானார் கானுயிர் புகைப்படக் கலைஞர் ஜெயராம்



- சர்வதேச அளவில் புகழ் பெற்ற கானுயிர் புகைப்படக் கலைஞர் ஜெயராம் (74) கோவையில் காலமானார்.
- கோவை ஆர்.எஸ்.புரத்தைச் சேர்ந்தவர் ஜெயராம். சர்வதேச அளவில் புகழ்பெற்ற கானுயிர் புகைப்படக் கலைஞர். மேக்ரோ போட்டோகிராபி எனப்படும் புகைப்பட கலையில் உலக அளவில் உள்ள ஐந்து தலை சிறந்த புகைப்படக் கலைஞர்களில் ஒருவராக தேர்வு பெற்றவர்.
- இயற்கை மற்றும் நுண்ணுயிரி சார்ந்த இவரின் புகைப்படங்களுக்கு பிரிட்டனின் ராயல் போட்டோகிராபி சொசைட்டி, சர்வதேச புகைப்பட கூட்டமைப்பு, யுனெஸ்கோ ஆகியவை விருதுகள் வழங்கி கௌரவித்துள்ளன.
- இயற்கை, வனப்பாதுகாப்பு, வன உயிரினம், தாவரவியல், பூச்சியியல், பகுப்பியல் போன்ற துறைகளில் நிபுணத்துவம் பெற்ற இவர், இவை சார்ந்து உலக அளவில் உள்ள பிரபல பல்கலைக் கழகங்களில் வகுப்புகள் எடுத்துள்ளார்.
- இவரால் புதிதாகக் கண்டறியப்பட்ட சிலந்தி மற்றும் தவளைக்கு உலக கானுயிர் அமைப்பு, இவருடைய பெயரைச் சேர்த்தே பெயர்களை சூட்டியிருப்பது, இவரின் கானுயிர் புகைப்படத் திறமைக்குக் கிடைத்த கௌரவமாகக் கருதப்படுகிறது.
- இவர் குறித்த 'பூச்சியிலிருந்து அண்டம் வரை என்ற ஆவணப் படம் பெரும் வரவேற்பைப் பெற்றது.



SHANMUGAM IAS ACADEMY

## பாதுகாப்பு

### இந்தியாவும் பிரான்சும் விசாகப்பட்டினத்தில் கூட்டு கடல்சார் பயிற்சியை நடத்துகின்றன



- தங்களின் வலுவான கடற்படை கூட்டாண்மையை வெளிப்படுத்தும் வகையில், இந்திய கடற்படை மற்றும் பிரான்ஸ் கடற்படை இணைந்து ஆந்திர பிரதேசத்தின் விசாகப்பட்டினம் கடற்கரையில் வங்காள விரிகுடாவில் கூட்டு கடல்சார் கூட்டாண்மை பயிற்சியை (MPX) மேற்கொண்டன.
- இந்தப் பயிற்சியில் இந்திய கடற்படைக் கப்பல்களான ஐஎன்எஸ் ராணா (வழிகாட்டப்பட்ட ஏவுகணை அழிப்பான்) மற்றும் ஐஎன்எஸ் சுமேதா (உள்நாட்டிலேயே கட்டப்பட்ட கடல் ரோந்துக் கப்பல்) ஆகியவை பிரெஞ்சு கடற்படையின் லா ஃபாயெட் கிளாஸ் ஃபிரிகேட் எஃப்எஸ் சர்கூஃப் உடன் இணைந்து பங்கேற்றன.
- இந்தப் பயிற்சியானது இரு படைகளின் கடற்படைத் திறனை மேம்படுத்தியது மட்டுமல்லாமல், வங்காள விரிகுடா பிராந்தியத்தில் பாதுகாப்பான மற்றும் நிலையான கடல்சார் சூழலைப் பேணுவதற்கான அவர்களின் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை வலியுறுத்தியது.

## விருதுகள் மற்றும் கௌரவங்கள்

### டாக்டர் பத்மா சுப்பிரமணியத்துக்கு 'முரளி நாத லஹறி' விருது



- டாக்டர் எம்.பாலமுரளிகிருஷ்ணாவின் 93–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, டாக்டர் எம்.பாலமுரளிகிருஷ்ணா நினைவு அறக்கட்டளை மற்றும் பாரதிய வித்யா பவன் சார்பில் சிறந்த கலைஞருக்கான தேசிய விருது ஜூலை 6–ஆம் தேதி வழங்கப்படவுள்ளது.
- 2023–ஆம் ஆண்டுக்கான முரளி நாத லஹறி விருது மற்றும் ரூ.1 லட்சம் ரொக்கம் பரத நாட்டியக் கலைஞர் டாக்டர் பத்மா சுப்பிரமணியத்துக்கு வழங்கப்படவுள்ளது.

- கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர் பங்கேற்று விருது, மற்றும் ரொக்கத்தை வழங்கவுள்ளார்.

## விளையாட்டு

### ஃபார்முலா 1 கார் பந்தயம்



- ஃபார்முலா 1 கார் பந்தயத்தின் நடப்பு சீசனில் 9–ஆவது ரேஸான ஆஸ்திரியன் கிராண்ட் ப்ரீயில், நெதர்லாந்து வீரரும், ரெட் புல் டிரைவருமான மேக்ஸ் வெர்ஸ்டாபென் வெற்றி பெற்றார்.
- மொனாக்கோ வீரர் சார்லஸ் லெக்லெரெக் (ஃபெராரி ), மெக்ஸிகோ வீரர் செர்ஜியோபெரெஸ் (ரெட் புல்) முறையே அடுத்த இரு இடங்களைப் பிடித்தனர். நடப்பு சீசனில் இது வரையிலான 9 பந்தயங்களில், வெர்ஸ் டாபென் 7 வெற்றிகளுடன் முன்னிலையில் இருக்கிறார். மேலும், எஃப் 1 பந்தயத்தில் மொத்தமாக 42–ஆவது வெற்றியைப் பதிவு செய்து அதிக வெற்றிகளை பதிவு செய்தோர் வரிசையில் 5–ஆவது இடத்தில் உள்ளார்.
- மறுபுறம், ரெட் புல் அணி முதல் முறையாக ஒரு சீசனில் தொடர்ந்து 10 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது.
- எஃப் 1 பந்தயத்தின் 10–ஆவது ரேஸான பிரிட்டீஷ் கிராண்ட் ப்ரீ, வரும் 9–ஆம் தேதி இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது

2023 Championship (Driver Standings – As of 2023 Austrian Grand Prix )

| Position | Driver | Team | points |
|---|---|---|---|
| 1 | Max Verstappen | Red Bull | 229 |
| 2 | Sergio Perez | Red Bull | 148 |
| 3 | Fernando Alonso | Aston Martin | 129 |

## சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்

### புவி வெப்பமயமாதலை குறைக்க முயற்சி: சூரிய ஒளியை மாற்றி அமைக்க அமெரிக்காவில் புதிய ஆராய்ச்சி



- புவி வெப்பமடைதலை விரைவுபடுத்துவது சூரியக் கதிர்கள்தான் என்பதால், அவற்றை தடுப்பதற்கான வழிமுறைகளை ஒரு குழு ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சூரிய கதிர்வீச்சின் ஒரு பகுதியை மீண்டும் விண்வெளிக்கு திருப்புதல், சூரிய கதிர்களை பிரதிபலிக்கும் வகையில் கடல் மேகங்களை பிரகாசமாக்குதல், சிரஸ் மேக ஆய்வு போன்ற வழிமுறைகள் குறித்து ஆராயப்படுகிறது.
- இந்த ஆராய்ச்சியானது, தொழில்நுட்பங்களை காட்டிலும், 'சூரிய கதிர்வீச்சு மாற்றியமைத்தல் முறைகள்' (Solar Radiation Modification) ஏற்படுத்தப்போகும் தாக்கங்களைப் பற்றிய ஒரு புரிதலை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகிறது.
- இதன் பெரும்பகுதி அடிப்படை காலநிலை செயல்முறைகள் மற்றும் "மனித பசுமை இல்ல வாயு உமிழ்வுகள்"(Human Greenhouse Gas Emissio ns) ஏற்படுத்தப்போகும் விளைவுகள் குறித்தும், கால நிலைக் கொள்கையின் ஒரு அங்கமாக சூரிய கதிர்வீச்சு மாற்றியமைத்தல் முறைகள் விளைவிக்கக் கூடிய அபாயங்கள் மற்றும் நன்மைகள் ஆகியவற்றை குறித்தும் சிறந்த முடிவுகளை செயல்படுத்த வழிவகுக்கும்.
- இதன் மூலம் சில வருட காலங்களுக்கு நமது கிரகமான பூமியை கணிசமாக குளிர்விக்கும் வாய்ப்பு கிடைக்கும். இவ்வாறு அந்த ஆய்வறிக்கை தெரிவித்திருக்கிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### ஸ்பேஸ்எக்ஸ், 'இருண்ட பிரபஞ்சத்தை' ஆராய ஐரோப்பிய விண்வெளி தொலைநோக்கி "யூக்ளிட்டை" அறிமுகப்படுத்துகிறது



- ஸ்பேஸ்எக்ஸ் ஃபால்கன் 9 ராக்கெட், ஒரு ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சி (ESA) தொலைநோக்கி யூக்ளிட், புளோரிடா, அமெரிக்காவின் கேப் கனாவரலில் இருந்து இருண்ட ஆற்றல் மற்றும் இருண்ட பொருளின் தன்மை மற்றும் பண்புகளை ஆய்வு செய்யும் நோக்கில் சுற்றுப்பாதையில் செலுத்தியது.

SHANMUGAM IAS ACADEMY

❖ தொலைநோக்கியானது பரந்த அளவிலான அலைநீளங்களில் உள்ள விண்மீன் திரள்களைக் கண்காணிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது.

**யூக்ளிட் விண்வெளி தொலைநோக்கி**

❖ இது கிரேக்க கணிதவியலாளர் யூக்லிட் ஆஃப் அலெக்ஸாண்டிரியாவின் பெயரால் அழைக்கப்படுகிறது.
❖ இது பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் கூறுகள் மற்றும் அதை நிர்வகிக்கும் அடிப்படை சட்டங்களை குறைந்தபட்சம் ஆறு வருடங்கள் செயல்பட வைப்பதன் மூலம் ஆராய திட்டமிட்டுள்ளது.
❖ தொலைநோக்கி தரை அடிப்படையிலான படங்களை விட குறைந்தது நான்கு மடங்கு கூர்மையான படங்களை வழங்கும்.

## உச்சநீதிமன்றத்தில் இலவச வை–ஃபை வசதி அறிமுகம்




❖ உச்ச நீதிமன்ற வளாகம் மற்றும் 5 நீதிமன்ற அறைகளில் வைஃபை வசதியை தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அறிமுகப்படுத்தினார்.
❖ 'உச்ச நீதிமன்றத்தை எண்மமயமாக்கும் செயல்முறையில் முக்கிய படியாக நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள பார் கவுன்சில், காத்திருக்கும் அறை, செய்தியாளர்கள் அறை மற்றும் தலைமை நீதிபதியின் நீதிமன்ற அறை உள்பட 5 நீதிமன்ற அறைகளில் வை–ஃ பை வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது.
❖ இச்சேவைக்கான பிரத்யேக வலைத்தளத்தில் பயனர்கள் தங்களின் கைப்பேசி எண்ணை உள்ளீட்டு குறுஞ்செய்தி மூலம் பெறப்படும் கடவுச்சொல்லைக் கொண்டு அனுமதிப் பெற்று வை–ஃபை வசதியைப் பயன்படுத்த தொடங்கலாம் என உச்ச நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர்.
❖ மேலும், காணொலி காட்சி வாயிலாக நீதிபதிகள் வழக்கு விசாரணை மேற்கொள்ள வேண்டியதற்கான மேம்படுத்தப்பட்ட அமைப்பும் உச்ச நீதிமன்றத்தின் நீதிமன்ற அறைகளில் நிறுவப்பட்டுள்ளது.
❖ அதிகபட்ச தொழில்நுட்ப பயன்பாடு மூலமாக உச்சநீதிமன்ற வளாகத்தில் பசுமைத் திட்டங்களை அமல்படுத்தும் நோக்குடன் காணொலி வசதிகளும் மேம்படுத்தப்பட்டுள்ளன.

# வங்கி

## இந்தியன் வங்கி மற்றும் , தேசிய மின் ஆளுமை சேவைகள் லிமிடெட் (NeSL) இணைந்து ப்ராஜெக்ட் WAVE இன் கீழ் டிஜிட்டல் சேவைகளை அறிமுகப்படுத்துகின்றன




- முன்னணி பொதுத்துறை கடன் வழங்குநரான இந்தியன் வங்கி, தேசிய மின் ஆளுமை சேவைகள் லிமிடெட் (NeSL) உடன் கைகோர்த்து, அதன் லட்சிய டிஜிட்டல் உருமாற்ற முயற்சியான Project WAVE (World of Advance Virtual Experience) இன் ஒரு பகுதியாக பல்வேறு டிஜிட்டல் சேவைகளை வெளியிடுகிறது.
- இது ஜனவரி 2022 இல் தொடங்கப்பட்டது. இந்த புதுமையான சேவைகள் வங்கி உத்தரவாதம் வழங்குதல் மற்றும் டெலிவரி செய்வதற்கான நேரத்தை கணிசமாகக் குறைப்பதன் மூலம் வங்கி அனுபவத்தில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.
- இவை பாரம்பரிய காகித அடிப்படையிலான செயல்முறைகளுக்கு பதிலாக மின்னணு வங்கி உத்தரவாதம் (e–BG) சேவையை அறிமுகப்படுத்தியுள்ளன.
- இந்த நடவடிக்கையானது இயற்பியல் முத்திரைத் தாள் மற்றும் வாடிக்கையாளர் கையொப்பங்களின் தேவையை நீக்குகிறது, அவற்றை டிஜிட்டல் ஸ்டாம்பிங் மற்றும் மின்–கையொப்பத்துடன் மாற்றுகிறது.

**இந்தியன் வங்கி**
- முதன்மைச் செயல் அலுவலர் &நிர்வாக இயக்குநர் – சாந்தி லால் ஜெயின்
- தலைமையகம் – சென்னை
- டேக்லைன் – உங்கள் சொந்த வங்கி
- நிறுவப்பட்ட ஆண்டு – 1907

## தேசிய அளவில் ஜிஎஸ்டி வசூலில், தமிழகம், புதுச்சேரி மண்டலம் 3–ம் இடம்




- கடந்த 2022–23–ம் நிதி ஆண்டில் தமிழகம், புதுச்சேரி மண்டலம் தேசிய அளவில் 3–ம் இடத்தை பிடித்துள்ளது.
- மத்திய அரசு ஜிஎஸ்டி (சரக்கு மற்றும் சேவை வரி) அறிமுகம் செய்ததன் 6–ம் ஆண்டு தற்போது கொண்டாடப்படுகிறது. இது நம் நாட்டில் செய்யப்பட்ட மிகப்பெரிய வரி சீர்திருத்தம் ஆகும். இதன் மூலம், ஒவ்வொரு குடிமகனுக்கும் சிறப்பான மற்றும் எளிமையான வரி என்ற குறிக்கோள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- தமிழகம், புதுச்சேரி மண்டலத்தில் இந்த வருவாய் 19 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன்மூலம், கர்நாடகா, மகாராஷ்டிராவுக்கு அடுத்தபடியாக தமிழகம், புதுச்சேரி மண்டலம் தேசிய அளவில் 3–ம் இடத்தை பிடித்துள்ளது.

SHANMUGAM IAS ACADEMY

- தமிழகம், புதுச்சேரி மண்டலத்தில் உள்ள 3 தணிக்கை ஆணையரகம் மூலம் 2022–23–ம் ஆண்டில் ரூ.288 கோடி ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்பட்டு உள்ளது.

## தமிழக நடப்புச் செய்திகள்

### கைதிகள் உணவு விடுதியில் 'பயோமெட்ரிக்' சேவை அறிமுகம்




- தமிழகத்தில் உள்ள மத்திய சிறைகளில் கைதிகளுக்காக இயக்கப்படும் உணவு விடுதிகளில் (கேன்டீன்) 'பயோமெட்ரிக் சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தமிழக சிறைத்துறையின் கீழ் மொத்தம் 142 சிறைகள் உள்ளன. தமிழக சிறைகள் 83 சதவீதம் வரை தற்போது நிரம்பி உள்ளன.
- கைதிகளின் நலனை கருத்தில் கொண்டு மத்திய சிறைகளிலும், பெண்கள் தனிச் சிறைகளிலும் கைதிகள் உணவு விடுதிகள் (கேன் டீன்கள்) செயல்படுகின்றன. இந்த விடுதிகளில் பல்வேறு பொருள்கள் விற்கப்படுகின்றன.
- பயோமெட்ரிக் சேவை: இதன் ஒரு பகுதியாக இப்போது கைதிகள் உணவு விடுதி முழுமையாக கணினிமயமாக்கப்பட்டு, பயோமெட்ரிக் சேவை தொடங்கப்பட்டது. இதன் மூலம் கைதிகள் இனி விடுதியில் பொருள்கள் வாங்குவதற்கு ஸ்மார்ட் கார்டு, அவர்களது விரல் ரேகை பதிவு போதுமானதாகும்.இதற்காக ஸ்மார்ட்கார்டு கைதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

### உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு




- உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம் (ஐஏடிஆர்), சென்னை ஆசியவியல் நிறுவனம் இணைந்து நடத்தும் 11–ஆவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சென்னையில் ஜூலை 7, 8, 9 ஆகிய மூன்று நாள்கள் நடைபெறவுள்ளது.
- தமிழர்களின் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்ய

SHANMUGAM IAS

வேண்டும். சங்க இலக்கியங்களில் கண்டறியப்படும் புதிய தகவல்களை இன்றைய தலைமுறைக்கு தெரியப்படுத்த வேண்டும், மேலும் தமிழ்மொழி, இலக்கியம், தமிழர் பண்பாடு, கலாசாரம், நாகரிகம் ஆகியவை குறித்து இளைஞர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் உள்ளிட்ட நோக்கங்களை கருத்தில் கொண்டும் இந்த மாநாடு நடத் தப்படுகிறது.

- ❖ மாநாட்டில் அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான் உள்ளிட்ட 20 நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பங்கேற்கவுள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

### இன்று (ஜூலை 3) எஸ்சிஓ மாநாடு: காணொலி வழியில் தலைமையேற்று நடத்தும் பிரதமர் மோடி



- ❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாடு பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காணொலி வழியில் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.
- ❖ சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீஃப் மற்றும் பிறர் பங்கேற்கும் இந்த மாநாட்டில் பிராந்திய பாதுகாப்பு நிலவரம், வர்த்தகம் மற்றும் நாடுகளிடையேயான போக்குவரத்து தொடர்பை மேலும் வலுப்படுத்துவது உள்ளிட்ட விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ❖ இந்தியா தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில், இந்த அமைப்பில் புதிய நிரந்தர உறுப்பினராகியுள்ள ஈரானுக்கு வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.
- ❖ காணொலி வழியில் நடைபெறும் இந்த மாநாட்டில் பங்கேற்க ஐ.நா. சபை, தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு (ஆசியான்), காமன் வெல்த் நாடுகள் அமைப்பு (சிஐஎஸ்), கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பு (சிஎஸ் டிஓ), யுரேசிய பொருளாதார ஒன்றியம் (இஏஇயு), ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பிக்கையை ஊக்குவிக்கும் நவடிக்கைகளான மாநாட்டு அமைப்பு (சிஐ சிஏ) ஆகிய 6 சர்வதேச, பிராந்திய அமைப்புகளின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
- ❖ ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு ரஷியா, சீனா, கிர்கிஸ்தான், கஜகஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாடுகளின் அதிபர்களால் கடந்த 2001 – ஆம் ஆண்டு சீனாவின் ஷாங்காய் நகரில் நடைபெற்ற மாநாட்டில் உருவாக்கப்பட்டது.
- ❖ இந்தியாவும் பாகிஸ்தானும் கடந்த 2017–இல் நிரந்தர உறுப்பு நாடுகளாகின. தற்போது சுழற்சி முறையில் இந்த அமைப்புக்கு நிகழாண்டில் இந்தியா தலைமை வகித்து வருகிறது.

SHANMUGAM IAS ACADEMY